| | |
|---|---|
| **ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன்/மானிய இல.** | |
| **திட்டப் பெயர்** | |
| **தயாரித்தவர்** | |
| **திகதி** | |
| **மீளாய்வு செய்தவர்/ குறிப்பு இட்டவர்** | |
| **திகதி** | |

**வழிகாட்டல்:**
திட்ட முகாமைத்துவம் ஆனது குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு உதவும் ஒரு கட்டமைப்பினை வழங்குகின்றது. ஒவ்வொரு திட்டத்திற்கும் தொடக்குதல், திட்டமிடல், நிறைவேற்றுதல், கண்காணித்தல்/கட்டுப்படுத்தல் மற்றும் முடிவுறுத்தல் என்பவற்றிற்கு பொறுப்புக் கூறும் அலுவலர்கள் எவ்வாறு செயற்படுகின்றார்கள் என்ற அறிவும் நிபுணத்துவமும் தேவைப்படுகின்றது. பயிற்றப்பட்ட முதன்மைத் திட்டப் பணியாளர்களும் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளும் இருக்குமிடத்து விரும்பப்பட்ட வருவிளைவு எட்டப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம்.

இந்தச் சரிபார்த்தற் பட்டியலின் நோக்கமானது நிறைவேற்று முகவர், செயற்படுத்தல் முகவர், திட்ட முகாமைத்துவ அலகு, மற்றும்/அல்லது திட்ட அமுலாக்கல் அலகு, என்பவற்றிற்குப் பொருத்தமானவாறு போதிய பணியாளர்கள் உள்ளனரா என்பதையும் உள்ளடக்கி முகாமைத்துவத் திறன்களை மதிப்பிடுவதற்கு உதவுவதாகும்.

இயன்றளவில், இந்த சரிபார்த்தற் பட்டியல், எந்த ஒரு கொள்வனவு நடவடிக்கையும் இடம்பெறுவதற்கு முன்னர், நிறைவேற்று முகவர், அமுலாக்க முகவர் அல்லது திட்ட முகாமைத்துவ அலகு ஆகியனவற்றின் முக்கிய திட்டப் பணியாளர்களினால் பூர்த்தி செய்ய வேண்டியதுடன் பெறுகை நடைமுறைகள், முக்கிய ஆளணி அல்லது ஒழுங்கமைப்புகள் மாற்றமடைகின்ற போதெல்லாம் தொடர்ந்தும் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

| **இல.** | **வினாக்கள்** | **ஆம்/ இல்லை/ பொருத்தம் அற்றது** | **நடவடிக்கைக்கான கருத்துக்கள்** |
|---|---|---|---|
| **அ. கட்டுப்பாட்டுச் சூழல்** | | | |
| 1 | ஆசிய அபிவிருத்தி வங்கி திட்ட முகாமைத்துவம் தொடர்பான நிறுவன அமைப்பு விளக்கப்படம் ஒன்றை நாம் வைத்திருக்கின்றோமா? | | |
| | • நடைமுறையிலுள்ள இந்த அமைப்பு கடன்/ நிதியிடல் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் செயற்படுத்தல் ஏற்பாடுகளின் அடிப்படையில் அமைந்துள்ளதா? | | |
| | • ஆசிய அபிவிருத்தி வங்கி திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு பணியாளர்களினதும் பொறுப்புக்கள் மற்றும் வகிபாகங்கள் சகல தரப்பினருக்கும் ஆவணப்படுத்தப்பட்ட பணி விவரணங்கள் மற்றும்/அல்லது போதிய ஊழியர் ஆற்றுப்படுத்தல் ஊடாக தெளிவு செய்யப்பட்டனரா? | | |
| | • இந்த ஆசிய அபிவிருத்தி வங்கி திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணியாளர்கள் | | |

## சரிபார்த்தற் பட்டியல் 1: சுயமதிப்பீட்டினைச் சரிபார்த்தற் பட்டியல்

| இல. | வினாக்கள் | ஆம்/ இல்லை/ பொருத்தம் அற்றது | நடவடிக்கைக்கான கருத்துக்கள் |
|---|---|---|---|
| | சகலரும் திட்டத்திற்கு முழு நேரமாகப் பணியாற்றுகின்றார்களா? | | |
| | • ஆசிய அபிவிருத்தி வங்கி திட்ட முகாமைத்துவம் தொடர்பாக நிரப்பப்படாத பதவிநிலைகள் உள்ளனவா? | | |
| 2 | திட்டத்தைக் கையாளும் பணியாளர்கள் பின்பற்றுவதற்கு செயல்முறைகள் கையேடு அல்லது ஆவணப்படுத்தப்பட்ட அறிவுறுத்தல்களை நாம் வைத்திருக்கின்றோமா? | | |
| | • ஒப்பந்தம் வழங்குதல், நிதி முகாமைத்துவம், ஒப்பந்த முகாமைத்துவம் உட்பட முக்கிய கொள்வனவு செயல்முறைகள் போதியளவு தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கின்றனவா? | | |
| 3 | நாம் போதுமான திட்ட பதிவேடு முகாமைத்துவச் செயல்முறைகளைக் கொண்டிருக்கின்றோமா? | | |
| | • எளிதாக மீட்கும் பொருட்டு திட்ட மூல ஆவணங்களின் அசல் மற்றும் புகைப்படப் பிரதிகளை சேமிக்கின்றோமா/ கோவைப்படுதுகின்றோமா? | | அலுவலகத்தினால் பேணப்படுகின்ற (நிறைவேற்று முகவர், அமுலாக்க முகவர், திட்ட முகாமைத்துவ அலகு/ திட்ட அமுலாக்கல் அலகு) கொள்வனவு, பகிர்ந்தளிப்புகள், ஆய்வு, ஏற்பு, நிறைவு சான்றிதழ்கள், பொதுத் தொடர்பாடற் கோவைகள், முன்னேற்ற அறிக்கை மற்றும் ஏனைய ஒப்பந்த முகாமைத்துவ ஆவணங்கள், எந்த அலுவலகத்தால் (நிறைவேற்று முகவர், அமுலாக்க முகவர், திட்ட முகாமைத்துவ அலகு/ திட்ட அமுலாக்கல் அலகு) பேணப்படுகின்றது என்பதை ஆவணப்படுத்தவும். |
| 4 | மீளப்பெறும் விண்ணப்பங்கள், இடைக்கால முன்னேற்றக் கொடுப்பனவுகள், ஆய்வு, ஏற்பு, மற்றும் நிறைவுச்வான்றிதழ்கள் என்பவற்றை உறுதிசெய்யும் அதிகாரமளிக்கப்பட்டவர்களின் பெயர் (பதவிநிலை) மற்றும் அவர்களின் மாதிரிக் கையொப்பம் ஆகியவற்றை நாம் பேணுகின்றோமா? | | |
| | • கொடுப்பனவிற்கான குறைந்தபட்ச அதிகார ஒப்புதலுக்குத் தேவையான மட்டத்தை நாம் குறிப்பிடுகின்றோமா? | | |
| 5 | கட்டுமானப் பணிகளை மேற்பார்வை செய்து பரிசோதிப்பதற்கு தகுதிபெற்ற அனுபவமுள்ள பொறியிலாளர்களை நாம் கொண்டிருக்கின்றோமா? | | |
| | • எமது பொறியிலாளர்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் திட்டக்கட்டுமான தளங்களை பரிசோதிப்பதுண்டா? | | திட்ட இடங்களை பொறியியலாளர்கள் எந்தனை தடவை பரிசோதிப்பர் என்பதனைக் குறிப்பிடுக |
| | • நாம் கட்டுமானதளங்களை பரிசோதிக்கும் போது அறிக்கைகளைத் தயாரிக்கின்றோமா? | | |
| 6 | நாம் திட்ட நிதியிலிருந்து வாங்கிய பொருட்களுக்காக சொத்துப் பதிவேடு ஒன்றினைப் பேணுகின்றோமா? | | |

## சரிபார்த்தற் பட்டியல் 1: சுயமதிப்பீட்டினைச் சரிபார்த்தற் பட்டியல்

| இல. | வினாக்கள் | ஆம்/ இல்லை/ பொருத்தம் அற்றது | நடவடிக்கைக்கான கருத்துக்கள் |
|---|---|---|---|
| | • சொத்துப் பதிவேடு போதிய தகவல்களைக் கொண்டிருக்கின்றதா (எ.கா., பொருட்களின் விபரங்கள், கொள்வனவு செய்யப்பட்ட திகதி, அளவு, காப்பாளர், இடம்/தன்மை முதலியன)? | | |
| | • நாம் திட்ட நிதியிலிருந்து வாங்கிய பொருட்களின் விபரப்பட்டியலை குறித்த கால இடைவெளியில் சரிபார்த்து பொருத்தமானவாறு சொத்துப் பதிவேட்டினை புதுப்பிக்கின்றோமா? | | குறித்த கால இடைவெளியில் பொருள் விபரப்பட்டியல் சரிபார்தலை மேற்கொள்பவர் யார் எனக் குறிப்பிடுக |
| | • பொருத்தமான அதிகாரத்தினால் பௌதிக பொருட்கள் விபரப்பட்டியல் ஆவணப்படுத்தப்பட்டு, ஒப்பமிடப்பட்டு, குறிப்பு இடப்படுகின்றனவா? | | பின்வருவனவற்றை குறிப்பிடுக:<br>• இறுதியாக எடுக்கப்பட்ட பொருட்கள் விபரப்பட்டியலின் திகதி<br>• பொருட்கள் விபரப்பட்டியல் சரிபார்பினை மேற்கொண்ட நபரின் பெயர்<br>• பொருட்கள் விபரப்பட்டியல் ஆவணத்தில் குறிப்பு இட்ட நபரின் பெயர் |
| **ஆ. கொள்வனவு செயல்முறை** | | | |
| 7 | எம்மிடம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சமீபத்திய (அ) கொள்வனவு வழிகாட்டிகள், (ஆ) நிபுணத்துவ ஆலோசகர்களைப் பயன்படுத்துவது தொடர்பான வழிகாட்டிகள், மற்றும் (இ) மதிப்பீட்டுக் குழுக்களுக்கு உதவும் மதிப்பீட்டு கையேடு என்பன உள்ளனவா? | | |
| | • முக்கிய திட்டப் பணியாளர்கள், விசேடமாக திட்டக் கொள்வனவு நடவடிக்கைகளைக் கையாளுபவர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கொள்வனவு செயல்முறைகள் தொடர்பான பயிற்சியினைப் பெற்றிருக்கின்றனரா? | | ஆசிய அபிவிருத்தி வங்கி பயிற்சிகள்/ செயலமர்வுகள் இடம்பெற்ற திகதிகளையும் பங்குபற்றிய திட்டப் பணியாளர்களின் பெயர்களையும் குறிப்பிடுக. |
| 8 | நாம் தேசிய கொள்வனவு வழிகாட்டிகளின் (கொள்வனவிற்காக நாம் அதனைப் பயன்படுத்தும் இடத்து) பிரதி ஒன்றினை வைத்திருக்கின்றோமா? | | |
| 9 | குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட விலைமனுக்கள் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றனவா? | | |
| | • திறக்கப்படாத விலைமனுக்களை அணுகுவதற்கு எழுத்துமூலமான ஒப்புதல் மற்றும் பதிவு முறைமையை நாம் கொண்டிருக்கின்றோமா? | | திறக்கப்படாத விலைமனுக்களுக்கான அணுகலைக் கொண்டிருப்பவர் யார் எனக் குறிப்பிடுக |
| 10 | இந்தத் திட்டத்தின் பெறுகை நடவடிக்கையின் முழுக் காலப்பகுதியையும் உள்ளடக்கி இதற்கென அமைக்கப்பட்ட வினைமனு மதிப்பீட்டுக் குழுவினைக் கொண்டிருக்கின்றோமா? | | விலைமனு மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களைக் குறிப்பிடுக |
| | • தனித் தனி கொள்முதல் என்ற அடிப்படையில் விலைமனு மதிப்பீட்டுக் குழு அமைக்கப்படுகின்றதா? | | விலைமனு மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களைக் குறிப்பிடுக |
| | • விலைமனு மதிப்பீட்டுக் குழு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியிடப்பட்ட ஒப்பந்தங்களை மதிப்பிடுவதற்கு | | |

## சரிபார்த்தற் பட்டியல் 1: சுயமதிப்பீட்டினைச் சரிபார்த்தற் பட்டியல்

| இல. | வினாக்கள் | ஆம்/ இல்லை/ பொருத்தம் அற்றது | நடவடிக்கைக்கான கருத்துக்கள் |
|---|---|---|---|
| | பயிற்றப்பட்டதா? | | |
| | • விலைமனுக்களின் நிதித் தேவைகளை பொருத்தமாக மதிப்பீடு செய்வதற்கு கணக்கியல்/நிதிசார் பின்னணி உள்ள உறுப்பிர் ஒருவரை விலைமனு மதிப்பீட்டுக் குழு உள்ளடக்கியிருக்கின்றதா? | | |
| | • விலைமனுக்களை மதிப்பீடு செய்வது மற்றும் விலைமனு மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரிப்பதில் விலைமனு மதிப்பீட்டுக் குழுவிற்கு உதவுவதற்கு நிபுணத்துவ ஆலோசகர்களை அமர்தியிருக்கின்றோமா? | | |
| **இ. உரிய நடவடிக்கை முறைமை** | | | |
| 11 | நாங்கள் ஒரு நடத்தை நெறிமுறைக் கோவையைக் கொண்டிருக்கின்றோமா? | | |
| 12 | குற்றங்களுக்காக (எ.கா., தவறான கொள்முதல், வழிகாட்டல்களிற்குப் புறம்பான நடவடிக்கை, நிதி முறைகேடு, திட்ட நிதியினை திட்டம் தொடர்பில்லாத நடவடிக்கைகளிற்கு பயன்படுத்தியமை அல்லது நிதி திருப்பப்பட்டமை) நாங்கள் ஒரு உயர் அதிகாரத்திடம் இருந்து அபராதத்திற்கு உட்படும் சாத்தியம் உள்ளதா? | | |
| 13 | நாங்கள் நெறிமுறையற்ற நடத்தை உட்பட உள்ளக மற்றும்/அல்லது வெளிவாரி முறைப்பாடுகளைக் கையாள்வதற்கு எழுதப்பட்ட அறிவுறுத்தல்களைக் கொண்டிருக்கின் றோமா? | | |
| 14 | நாங்கள் பணியாளர்களுக்கு சங்கங்கள் மற்றும் தொடர்புடைய கட்சிகளைப் பதிவுசெய்வதற்கு (எ.கா., சாத்தியமான நலன் முறன்பாடு) ஒரு முறைமையைக் கொண்டிருக்கின்றோமா? | | தற்போதுள்ள சங்கம் மற்றும் உறவுமுறை தொடர்பில் இது எவ்வாறு கையாளப்படுகின்றது எனக் குறிப்பிடுக. |
| **ஈ. நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் முறைமை** | | | |
| 15 | திட்டத்தினது நிதி முகாமைத்துவக் குழு போதுமான உறுப்பினர்களை (எ.கா., முழுநேர தகைமையுள்ள கணக்காளர்களுடன்) கொண்டிருக்கின்றதா? | | |
| 16 | கொடுக்கல் வாங்கல்களைப் பதிவுசெய்யும் போது நாம் இயல்பாகச் சேர்தல் (அட்டுரு செலவின) அடிப்படை கணக்கீட்டினைப் பயன்படுத்துகின்றோமா? | | இல்லை என்றால், பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையின் வகையைக் குறிப்பிடுக (எ.கா., ரொக்கக்கணக்கீடு). |
| | • எமது நிதிப் பதிவேடுகளுக்கு நாம் ஒரு காப்பு நகலைக் கொண்டிருக்கின்றோமா? | | நடைமுறையில் உள்ள காப்பு நகல் செயல்முறையைக் குறிப்பிடுக |
| | • இது சூழ்ச்சிக் கையாளுகையிலிருந்து சுயாதீனமானது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு எமது நிதிப் பதிவுகளை அணுக கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கின்றோமா? | | நடைமுறையில் உள்ள அணுகல் கட்டுப்பாடுகளைக் குறிப்பிடுக |
| 17 | நாங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சமீபத்திய வங்கிக் கடன் கொடுப்பனவுக் கையேட்டினை வைத்திருக்கின்றோமா? | | |
| | • முக்கிய திட்டப் பணியாளர்கள், விசேடமாக திட்டக் கடன் கொடுப்பனவுகளைக் கையாளுபவர்கள் | | ஆசிய அபிவிருத்தி வங்கி பயிற்சிகள்/ செயலமர்வுகள் இடம்பெற்ற திகதி(களை)யையும் பங்குபற்றிய திட்டப் |

# சரிபார்த்தற் பட்டியல் 1: சுயமதிப்பீட்டினைச் சரிபார்த்தற் பட்டியல்

| இல. | வினாக்கள் | ஆம்/ இல்லை/ பொருத்தம் அற்றது | நடவடிக்கைக்கான கருத்துக்கள் |
|---|---|---|---|
| | ஆசிய அபிவிருத்தி வங்கியின் கொடுப்பனவுகள் தொடர்பான பயிற்சியினைப் பெற்றார்களா? | | பணியாளர்களின் பெயர்களையும் குறிப்பிடுக. |
| 18 | நாங்கள் போதுமான கடமைப் பிரிப்பினைக் கொண்டிருக்கின்றோமா (எ.கா., விலைப்பட்டியல்களைக் கணக்கீடு செய்யும் பணியாளர்கள் விலைப்பட்டியல்களுக்கு ஒப்புதலளித்தல், ஒப்பந்தாரருக்குக் கொடுப்பனவினை மேற்கொள்ளல், அல்லது வங்கிக் கணக்கிணக்கம் போன்ற பணிகளில் ஈடுபடாதிருத்தல்)? | | பின்வருவனவற்றை நிறைவேற்றுவோர் யாரென்பதைக் குறிப்பிடுக (i) பெற்றுக்கொள்ளப்பட்ட விலைப்பட்டியல்களை கணக்கீடு செய்தல், (ii) கொடுப்பனவினைச் சரிபார்த்து ஒப்புதலளித்தல் (iii) காசோலைகளை வழங்குதல், மற்றும் (iv) வங்கிக் கணக்கிணக்கத்தினை மேற்கொள்ளுதல் |
| 19 | கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்பு பொருட்கள்/ சேவைகளின் விநியோகத்தினை உறுதிப்படுத்துவதற்கு சான்றளித்தல் அல்லது வேலைகளின் பௌதிக முன்னேற்றத்தினை உறுதிப்படுத்துவதற்கு பரிசோதனை சான்றிதழ் என்பனவற்றை நாம் கோருகின்றோமா? | | |
| | • கொடுப்பனவுகளுக்கு இரட்டை அங்கீகாரத்தினை நாம் கோருகின்றோமா? | | கொடுப்பனவுகளை வழங்குவதற்கு தேவையான அதிகாரங்களைக் குறிப்பிடுக |
| | • ஒப்பந்ததாரர்கள்/ விநியோகித்தர்களுக்கு கொடுப்பனவினை காசோலை ஊடாக மேற்கொள்கின்றோமா? | | இல்லை என்றால், கொடுப்பனவு முறையைக் குறிப்பிடுக |
| | • பயன்படுத்தப்படாத காசோலைகள் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றனவா? | | பயன்படுத்தப்படாத காசோலைகளின் பாதுகாப்பாளர் யார் எனக் குறிப்பிடுக |
| 20 | நாம் முன்பணக் கணக்குகளின் வங்கிக் கணக்கிணக்கத்தினை தவணை முறைகளில் செயல்படுத்துகின்றோமா? | | |
| | • நாம் கணக்கிணக்கக் கூற்றில் நிலுவையிலுள்ள இணக்க விடயங்களை உரிய காலத்தில் தீர்க்கின்றோமா? | | நிலுவையாக உள்ள இணக்க விடயங்களின் வயதையும் அவற்றினைத் தீர்க்காமைக்கான காரணங்களையும் குறிப்பிடுக. |
| 21 | நாங்கள் எமது கொடுப்பனவுப் பதிவுகளை ஆசிய அபிவிருத்தி வங்கியின் கொடுப்பனவு அறிக்கைகளுடன் (LFIS உள்ள) காலத்திற்குக் காலம் கணக்கிணக்கம் செய்கின்றோமா? | | |
| | • நிலுவையிலுள்ள இணக்கமற்ற விடயங்கள் உள்ளனவா? | | நிலுவையாக உள்ள இணக்க விடயங்களின் வயதையும் அவற்றினைத் தீர்காமைக்கான காரணங்களையும் குறிப்பிடுக. |
| 22 | கணக்காய்வு செய்யபட்ட திட்டக் கணக்குகளில் பரிந்துரைகளைக் கொண்டிருக்கின்றோமா? | | கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் ஆண்டினைக் குறிப்பிடுக |
| | • கணக்காய்வு செய்யப்பட்ட திட்டக் கணக்குகளில் உள்ள சகல பரிந்துரைகளையும் நாங்கள் அமுல்படுத்தியிருக்கின்றோமா? | | இன்னமும் அமுல்படுத்தப்படாத பரிந்துரைகளைப் பட்டியலிட்டு அவற்றை அமுல்படுத்துவற்கான பரிந்துரைகளைக் குறிப்பிடுக |
| | • பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஆவணப்படுத்தினோமா? | | |